**செ.வெ.எண்: 47** **நாள்: 22.09.2016**

## பத்திரிகைச்செய்தி

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்படும் 50மூ இடங்களுக்கும் தொழிற் பயிற்சி வகுப்புகளில் சேர்ந்திட இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க 23.09.2016 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ,www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கவும். அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள இடங்களுக்கு மட்டும் **24.09.2016** (முற்பகல் 11.00 மணிக்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கும், பிற்பகல் 2.00 மணிக்கு 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கும் ) அன்று அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் புதுக்கோட்டையில் மாவட்ட கலந்தாய்வு நடைபெறவுள்ளது. மேற்க்காணும் மாவட்ட கலந்தாய்விற்கு விண்ணப்பத்துள்ள விண்ணப்பதாரர்கள் அனைவரும் மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

31.08.16-ன் நிலவரப்படி நிரப்பப்படாமல் மீதமுள்ள (8-ம் வகுப்பிற்கு அரசு ஐ.டி.ஐ விராலிமலையில் 1 இடமும், தனியார் ஐடிஐ-யில் 19 இடங்களும், ஆக மொத்தம் 20 இடங்களும்) 10-ம் வகுப்பிற்குதனியார் ஐடிஐ-யில் 53 இடங்களுக்கும்.. மாவட்ட கலந்தாய்வு நடைபெறவுள்ளது. மேலும் ,விபரங்களுக்கு புதுக்கோட்டை, அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் அவர்களை நேரிலோ, அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். தொலைபேசிஎண். 04322-221584

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**